குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.216/2018

2021 ம் ஆண்டு ஆகஸ்டு 26-ம் நாள் வியாழக்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 3-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு.பெரமச்சி வயது : 32

க/பெ : பழனி தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : ஜாதி :

மாவட்டம் :

முதல் விசாரணை.

நான் எல்லாயூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் தடவழி சம்மந்தமாக பிரச்சினை உள்ளது. 21.10.2017-ம் தேதி பகல் 3.00 அளவில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது சத்தம் கேட்டது. நான் வந்து பார்த்த போது எனது அப்பாவும், அம்மாவும் அடிப்பட்டு கீழே கிடந்தார்கள். நான் உள்ளே வரும் போது ஆஜர் எதிரிகள் கெட்டவார்த்தை பேசி கொண்டு வெளியே சென்றதால் அவர்கள் அடித்தார்கள் என்று நான் சொல்கிறேன். நானும், மோகன்ராஜீம் அடிப்பட்டிருந்தவர்களை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

தடப்பிரச்சினை காரணமாக என் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கும் லட்சுமண முதலியார் நிலத்திற்கும் இடையே தடம் செல்லுகிறது என்றால் சரிதான். எதிரிகள் அவ்வழியாக செல்வதை நாங்கள் தடுக்கவில்லை. குற்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. லட்சுமண முதலியார் நிலத்தை வாங்குவதற்கு எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே போட்டிகள் உள்ளதால் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஓம்./-பெரமச்சி

ஓம்./- M . A . சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்( FAC ),
ஓமலூர்.